## தொழில் முதலீடு செய்ய தமிழ்நாட்டுக்கு வாருங்கள்

# லாஜிஸ்டிக்ஸ், கெமிக்கல் நிறுவனங்களுக்கு எடப்பாடி பழனிசாமி கடிதம்

## சிறப்பான ஆதரவு; ஊக்கச் சலுகை தருவோம்

சென்னை, ஜூலை 14–

**லாஜிஸ்டிக்ஸ், கெமிக்கல் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தனித்தனியாக கடிதம் எழுதியுள்ளார்.**

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளிநாட்டு முதலீடுகளை தமிழ்நாட்டில் ஈர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். முதலீடுகளை எளிதாக ஈர்ப்பதற்காக, நாடுகளுக்கான சிறப்பு அமைவுகளை உருவாக்குதல், வெளிநாட்டு தூதுவர்களுடனான சந்திப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதற்கான சிறப்பு பணிக்குழு அமைத்தல் என பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் உலகப் பொருளாதாரச் சூழலில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளால், சில நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளை இந்தியாவிற்கு இடம் பெயர்ந்திட முடிவெடுத்துள்ளன. அண்மையில் 15,128 கோடி ரூபாய் முதலீட்டிற்கான 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டன. இது இந்த பேரிடர் காலத்திலும் பன்னாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள தலைசிறந்த இடமாக தமிழ்நாட்டை கருதுவதை எடுத்துக்காட்டுகிறது.

உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்களை தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஈர்ப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 5 நிறுவனங்களுக்கு அழைப்பு

தற்பொழுது, பெடக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர், தலைவர் (மற்றும்) முதன்மைச் செயல் அலுவலர் பெரட்ரிக் டபிள்யு ஸ்மித் மற்றும் யுபிஎஸ் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் டேவிட் பி அப்னே, ஆகிய 2 முன்னணி லாஜிஸ்டிக்ஸ் நிறுவன தலைவர்களுக்கும் மற்றும் சவுதி அரெம்கோ நிறுவனத்தின் தலைவர் அமின் எச் நாசர், எக்ஸன் மொபில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் டாரன் வுட்ஸ் மற்றும் சிபிசி கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஜியா ருயே ஊ ஆகிய 3 முன்னணி பெட்ரோ கெமிக்கல் நிறுவனங்களின் தலைவர்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்திட நேரிடையாக அழைப்பு விடுத்து முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்.

### ஊக்கச்சலுகை

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்வதில் உள்ள பல்வேறு சாதகமான அம்சங்களையும் சிறப்பான தொழில் சூழலையும் குறிப்பிட்டு, புதிய தொழில் முதலீடுகளுக்கு தமிழ்நாடு அரசு சிறப்பான ஆதரவை நல்கும் என்றும் அவர்களின் தேவைகளுக்கேற்ப ஊக்கச் சலுகைகளை வழங்கிடும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது என்று அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## புதுச்சேரி காங்கிரஸ் எம்.எல்.ஏ. பதவி பறிப்பு

# சபாநாயகர், தேர்தல் ஆணையம் பதிலளிக்க சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 14–

**சட்டப்பேரவை உறுப்பினர் பதவியைப் பறித்ததை எதிர்த்து, காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட புதுச்சேரி எம்.எல்.ஏ. தனவேலு தாக்கல் செய்த மனுவுக்கு 4 வாரங்களில் பதிலளிக்க சட்டப்பேரவை சபாநாயகர், தேர்தல் ஆணையத்துக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.**

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் பாகூர் தொகுதியில் கடந்த 2016 ம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட தனவேலு வெற்றி பெற்றார். அந்த தொகுதியில் அரசு சார்பில் வளர்ச்சிப் பணிகள் சரிவர நடைபெறுவதில்லை என்று ஆளும்கட்சியான காங்கிரஸுக்கு எதிராகவே தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தார்.

ஆளுங்கட்சியில் இருந்துகொண்டே அரசை விமர்சித்ததால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள், அப்போதைய தலைவராக இருந்த அமைச்சர் நமச்சிவாயத்திடம் புகார் அளித்தனர். அதன்படி, ஜனவரி 19–ந் தேதி தனவேலு எம்.எல்.ஏ. காங்கிரஸ் கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து, ஜனவரி 29 ம் தேதி துணைநிலை ஆளுநர் கிரண்பேடியைச் சந்தித்த தனவேலு எம்.எல்.ஏ.முதல்வர் நாராயணசாமி மற்றும் அமைச்சர்களுக்கு எதிரான ஊழல் பட்டியலை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து, தனவேலுவைத் தகுதி நீக்கம் செய்து (எம்.எல்.ஏ. பதவிப் பறிப்பு) நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் அரசு கொறடாவான அனந்தராமன் எம்.எல்.ஏ., ஜனவரி 30ம் தேதி மனு கொடுத்தார்.

இந்நிலையில், ஜூலை 10 ஆம் தேதி தனவேலுவின் பதவியைப் பறித்து சபாநாயகர் சிவக்கொழுந்து உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக அந்த தொகுதி காலியானதாகவும் அறிவிக்கப்பட்டது.

பதவிப் பறிப்பு உத்தரவை ரத்து செய்யக்கோரி தனவேலு சென்னை ஐகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி கே.ரவிச்சந்திரபாபு முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, செய்திகள் மற்றும் டிவிடி அடிப்படையில் புகார் அளிக்கப்பட்டதாகவும், தன் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட வில்லை எனவும் தனவேலு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், தேர்தல் ஆணையம் எந்த முடிவும் எடுக்கக் கூடாது என உத்தரவிட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அப்போது, சபாநாயகர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், ஏற்கெனவே எம்.எல்.ஏ. பதவி பறிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தொகுதி காலியாக இருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்துவிட்டதால் மேற்கொண்டு இடைக்கால உத்தரவு ஏதும் பிறப்பிக்கத் தேவையில்லை என விளக்கமளித்தார். இதையடுத்து, மனுவுக்கு நான்கு வாரங்களில் பதிலளிக்க புதுச்சேரி சட்டப்பேரவை சபாநாயகர் மற்றும் தேர்தல் ஆணையத்துக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# கொரோனா பாதிப்பு: மீனம்பாக்கம் சப்–இன்ஸ்பெக்டர் குருமூர்த்தி மரணம்

சென்னை, ஜூலை 14–

சென்னையில் கொரோனா பாதிப்பிற்கு ஆளாகி சிகிச்சை பெற்று வந்த போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் குருமூர்த்தி சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்தார்.

தமிழக காவல்துறையில் 1986ம் ஆண்டு சப்–இன்ஸ்பெக்டராக பணிக்கு சேர்ந்தவர் குருமூர்த்தி (வயது 55). சென்னை நவீன காவல் கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றி வந்த இவர் அயல் பணியாக மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் ரோந்து வாகன பொறுப்பாளராக பணியாற்றி வந்தார்.

காய்ச்சல் காரணமாக ஜூன் மாதம் 23–ந் தேதி குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் கொரோனா தொற்று பரிசோதனை செய்தார். அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். கொரோனா பாதிப்பு அதிகமானதை அடுத்து மூச்சுத்திணறல் காரணமாக அவர் வென்டிலேட்டர் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில்



சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

மதுராந்தகத்தை சேர்ந்த குருமூர்த்தி சென்னை மேற்கு தாம்பரம் காவலர் குடியிருப்பில் வசித்து வந்தார். இவருக்கு திருமணமாகி கோமதி (வயது 49) என்ற மனைவியும், அலமேலு மங்கை (வயது 25) என்ற மகளும், தினேஷ்குமார் (வயது 21) என்ற மகனும் உள்ளனர்.

குருமூர்த்தியின் மரணத்தை தொடர்ந்து மாநகர காவல்துறையில் இதுவரை 4 போலீசார் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர்.

# கொரோனாவால் இறந்தவர் உடலை டிராக்டரில் கொண்டு சென்ற டாக்டர்: பொதுமக்கள் பாராட்டு

ஐதராபாத், ஜூலை 14–

தெலுங்கானாவில் கொரோனாவால் உயிரிழந்தவரின் சடலத்தை டிவைர்கள் எடுத்துச் செல்ல மறுத்த நிலையில், டாக்டர் ஒருவர் டிராக்டரில் அந்த சடலத்தை ஏற்றிச் சென்றார். அவரின் செயலை அமைச்சரும், பொதுமக்களும் பாராட்டி உள்ளனர்.

தெலுங்கானாவின் பெடப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் ஸ்ரீராம் என்பவர் டாக்டராக பணிபுரிந்து வருகிறார்.

மேலும் கொரோனா பரவல் தடுப்பு கண்காணிப்பு அதிகாரியாகவும் உள்ளார். இவர் கொரோனாவால் உயிரிழந்த ஒருவரது உடலை ஆம்புலன்ஸ் டிரைவர்கள் எடுத்துச் செல்ல மறுத்துள்ளனர்.

உயிரிழந்தவரின் உறவினர்களும் என்ன செய்வது எனத் தெரியாமல் திகைத்து நின்றபோது, டாக்டர் ஸ்ரீராம் பாதுகாப்பு உபகரணம் அணிந்து கொண்டு அந்த சடலத்தை டிராக்டரில் சவக்குழிக்கு எடுத்துச் சென்றுள்ளார். அவரின் இந்த செயலை பொதுமக்கள் மட்டுமின்றி மாநில நிதி அமைச்சர் ஹரீஷ் ராவும் பாராட்டியுள்ளார்.

### பெயர் மாற்றம்

Ranga Rajan Gopalakrishnan, தந்தை பெயர்: Gopalakrishnan, பிறந்த தேதி: 20.05.1958, நெ.130A, வேலன் நகர் 7வது தெரு, வளசரவாக்கம், சென்னை–600 087, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Ranga Rajan Thiruvottiyur Gopalakrishnan,** என்று அழைக்கப்படுகிறேன்.

Ranga Rajan Gopalakrishnan

### பெயர் மாற்றம்

Suharthi Sampath Udaya Kumar (Hindu), கணவர் பெயர்: Nizam Fisal, பிறந்த தேதி: 08.09.1983, நெ.56/33, 2வது மாடி, அருணா ப்ளாட்ஸ், கவரை தெரு, சைதாப்பேட்டை, சென்னை–600 015, என்ற முகவரியில் வசிக்கும் நான் இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியதால் 07.07.2008 முதல் **Farzia Nihal Nizam Fisal (Islam)** என்று அழைக்கப்படுகிறேன்.

Suharthi Sampath Udaya Kumar (Hindu)

### பெயர் மாற்றம்

Devid Paulraj Anbottu, தந்தை பெயர்: Anbottu, பிறந்த தேதி: 24.03.1979, நெ.20/66, சுடலை முத்து தெரு, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை–600 081, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **DAVID PAULRAJ ANBOTTU,** என்று அழைக் கப்படுகிறேன்.

Devid Paulraj Anbottu

### பெயர் மாற்றம்

THAHIR HUSSAIN, தந்தை பெயர்: Abdul Satthar, பிறந்த தேதி: 01.02.1966, நெ.24, தங்கராஜ் நகர், திருப்பாப்புலியூர், கடலூர் –607 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **THAHEER HUSSAIN,** என்று அழைக் கப்படுகிறேன்.

THAHIR HUSSAIN

### பெயர் மாற்றம்

E.KUPPUBAI, கணவர் பெயர்: Elumalai, பிறந்த தேதி: 01.01.1947, நெ.40/50, பாரி தெரு, அவ்வை நகர், சூளைமேடு, சென்னை–600 094, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **E.KUPPAMMAL,** என்று அழைக் கப்படுகிறேன்.

E.KUPPUBAI

### பெயர் மாற்றம்

PANDIYAN PERUMAL, தந்தை பெயர்: Perumal, பிறந்த தேதி: 10.08.1975, நெ.45, தர்மராஜா கோவில் தெரு, இந்திரா நகர், கோவூர், சென்னை–600 122, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PANDIAN PERUMAL,** என்று அழைக் கப்படுகிறேன்.

PANDIYAN PERUMAL

### பெயர் மாற்றம்

Subramanyam Sarma Tamarapalli, தந்தை பெயர்: Satyaramadas Tamarapalli, பிறந்த தேதி: 10.09.1964, Guha Nivas, பிளாட் நெ.139, நெ.20, குமரன் காலனி, 4வது தெரு, வடபழனி, சென்னை–600 026, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SUBRAHMANYA SARMA TAMARAPALLI,** என்று அழைக் கப்படுகிறேன்.

Subramanyam Sarma Tamarapalli

### பெயர் மாற்றம்

Narasimhan Saravanan, தந்தை பெயர்: Narasimhan, பிறந்த தேதி: 11.11.1981, ப.நெ.3, பு.நெ.7, வடக்கு ஹை கோர்ட் காலனி விரிவு, வில்லிவாக்கம், சென்னை–600 049, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Narasimhan Vasantha Sharavanan,** என்று அழைக் கப்படுகிறேன்.

Narasimhan Saravanan

# முதல்வர் வெளியிட்ட 5 பால் பொருட்கள் சந்தைக்கு புதியவை: வீணாக களங்கம் கற்பிப்பதா?

## பால் முகவர்கள் சங்க தலைவருக்கு ‘ஆவின்’ நிறுவனம் கடும் கண்டனம்

சென்னை, ஜூலை 14–

**முதல்வர் வெளியிட்ட ஆவின் நிறுவனத்தின் 5 வகையான புதிய பால் பொருட்கள் சந்தைக்கு புதிதானவை. இதனை வீணாக களங்கப்படுத்தும் வகையில் தவறான அறிக்கை வெளியிடுவதா? என பால் முகவர்கள் தொழிலாளர் சங்க தலைவருக்கு ஆவின் நிறுவனம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

ஆவின் நிறுவனத்தின் சார்பில் 7.7.2020 அன்று முதல்வரால் 5 வகையான புதிய பால் பொருட்கள் அறிமுகம் செய்யப்பட்டன. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் ஆவின் மோர், சாக்லேட் மற்றும் மேங்கோ லெஸ்ஸி, நீண்ட நாட்கள் கெட்டுப்போகாத சமன்படுத்தப்பட்ட பால் மற்றும் டீ மேட் என்ற புதிய வகை பால் ஆகியவை ஆகும்.

இதை தொடர்ந்து தமிழ் நாடு பால் முகவர் தொழிலாளர் நல சங்க தலைவர் பொன்னுசாமி இந்த ஐந்து பொருட்களும் ஏற்கனவே சந்தையில் உள்ளன என்றும் ஆவின் நிர்வாகம் இந்த பொருட்கள் புதியவை என்று மாயத் தோற்றத்தை உருவாக்குகிறது என்று தவறான அறிக்கை ஒரு வார இதழ் மற்றும் ஊடகங்களில் வெளியிட்டுள்ளார். இந்த செய்தி உண்மைக்கு புறம்பானது மற்றும் விஷமத்தனமானது.

ஆவின் நிறுவனம், இதுவரை அதிக பட்சமாக 6% கொழுப்புசத்து மற்றும் 9% இதர சத்தும் உள்ள பாலை மட்டுமே விற்பனை செய்து வருகிறது. இப்போது ஆவின் டீ மேட் என்ற புதிய வகை பால் 6.5% மற்றும் 9% புரத சத்துகொண்டது. இந்த பால் வர்த்தகரீதியில் டீகடைகள், ஹோட்டல், சமையல் வல்லுநர்கள் பயன்படுத்தும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

### எதிர்ப்பு சக்தி

லெஸ்ஸியை பொறுத்தவரை ஆவின் நிர்வாகம் ஏற்கனவே சாதாரண வகை லெஸ்ஸி மற்றும் ப்ரோ பையோடிக் என்ற இரு வகை லெஸ்ஸி விற்பனை செய்து வருகிறது. தற்போது குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் விரும்பி பருகும் வகையில் சாக்லேட் மற்றும் மாம்பழ சுவைகளில் புதிய இரண்டு வகைகளில் அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும் ஆவின் மோர் சாச்சேட் பேக்குகளில் மற்றும் 200 மி.லி. பெட் ஜார்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா பெருந்தொற்று காலகட்டத்தில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் வகையில் இஞ்சி, மஞ்சள், துளசி, சீரகம், பெருங்காயம், எலுமிச்சை, இந்துப்பு போன்ற மூலிகை பொருள்களை சேர்த்து இயற்கையான முறையில் மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த தமிழக அரசின் யோகா மற்றும் இயற்கை மருத்துவ துறையின் மருத்துவர்கள் பரிந்துரையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட புதிய வகை மோரை அறிமுகப்படுத்தியுள்ளது.

### 90 நாட்கள் கெடாத பால்

நீண்ட நாள் கெட்டுப்போகாத அதிக வெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட பால் ( 4.5% கொழுப்புசத்து மற்றும் 8.5% புரத சத்தும் கொண்டது) புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பால் குளிர்சாதன பெட்டியை தவிர்த்து அறை வெப்ப நிலையில் 90 நாட்கள் வரை கெட்டுப்போகாமல் இருக்கும் வகையில், பிளக்சி பேக்குகளில் ஆவின் அறிமுகப்படுத்துவது இதுவே முதல் முறை.

மேற்குறிய உண்மைகளை கருத்தில் கொள்ளாமல் பொன்னுசாமி ஆவின் நிர்வாகத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பத்திரிகை மூலமாகவும், ஊடகங்கள் மூலமாகவும் தவறான தகவல்களை வெளியிட்டுள்ளார். இதனை ஆவின் நிர்வாகம் வன்மையாக கண்டிக்கிறது.

### புதியவை

முதலமைச்சரால் அறிமுகப்படுத்தப் பட்ட 5 புதிய பொருட்களும் சந்தைக்கு புதியவை. மேலும் டீ மேட் பால் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகிறது என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டினை பொன்னுசாமி கூறியள்ளார். இந்த பால் வணிக நோக்குடன் சில்லறை விற்பனை மற்றும் மொத்த விற்பனையாளர்கள் அதிகம் பயனடையும் வண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விற்பனை கமிஷன் ரூ.5 தனியார் நிறுவனம் போல தரப்படுகிறது. இது தனியார் நிறுவனங்களிடையே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த புதிய பொருட்கள் அறிமுகப்படுத்தியதை தொடர்ந்து தனியார் நிறுவனங்களும் இதே போன்று புதிய பொருட்களை அறிமுகபடுத்த முன்வந்துள்ளன. தனியார் பாலைவிட சிறந்த முறையில் அதிக கொழுப்பு சத்து (6.5%) கொண்ட இந்த பால் டீ கடைகள் மற்றும் உணவகங்கள் அதிக கோப்பைகள் தயாரிக்கும் வகையில் அதிக கொழுப்பு மற்றும் புரதசத்து கொண்டது. ஆனால் இந்த உண்மைகள் பொன்னுசாமியால் திரித்து கூறப்பட்டுள்ளது .

கோவிட்–19 இக்கட்டான சூழ்நிலையில், தனியார் துறையினர் விவசாயிகளிடமிருந்து பால் கொள்முதலை தவிர்த்த நிலையில், தமிழக அரசின் பால்வளத்துறையின் மூலம் ஆவின் நிறுவனம் பால் கொள்முதல் செய்வதோடு தமிழகம் முழுவதும் சென்னை உட்பட அனைத்து நகரங்களிலும் தங்குதடையின்றி பால் மற்றும் பால் உபபொருள்கள் பொதுமக்களுக்கு சரியான நேரத்திற்கு விற்பனை செய்து தமிழக மக்களுக்கு சேவை செய்து வருகிறது.

இதை பொறுக்க முடியாத பொன்னுசாமி போன்றோர் பால் முகவர்கள் தொழிலாளர்கள் சங்கம் என்ற பெயரில் தினமும் உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டு சுய விளம்பரத்திற்காக, கிராமப்புற விவசாயிகள் மற்றும் நகர்ப்புற நுகர்வோர்களுக்கு லாப நோக்கமின்றி செயல்பட்டு வரும் மிகப்பெரிய கூட்டுறவு நிறுவனமான ஆவின் செயல்பாடுகளை குறை கூறுவதையே தொழிலாக கொண்டுள்ளார்.

தமிழக மக்களுக்காக ஆவின் இந்த இக்கட்டான கொரோனா தொற்று காலகட்டத்திலும் தமிழக அரசின் சீரிய வழிகாட்டுதல் மூலம் சிறப்பாக பணி செய்து வருவது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




VEHICLE FOR SALE

| S.NO. | VEHICLE NO. | MAKE | MODEL |
|---|---|---|---|
| 1. | TN09BF 8917 | TATAACE | 2010 |

CONTACT : 7373280408

KINGFA
金发科技(印度)有限公司
கிங்ஃபா சயின்ஸ் & டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட்
(முன்னர் ஹைட்ரோ எஸ் & எஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்)
CIN: L25209TN1983PLC010438
பதிவு அலுவலகம்: தன் பில்டிங், 3வது தளம், அண்ணாசாலை, சென்னை - 600 002.
போன்: 044-28521736, ஃபேக்ஸ்: 044-28520420. மின்னஞ்சல்: cs@kingfaindia.com
இணையதளம்: www.kingfaindia.com

அறிவிப்பு
போஸ்டல் பாலோட்டின் முடிவு

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014, செஃபி (எல் ஓ டி ஆர்) விதிமுறைகள் 2015-ன் ஒழுங்குமுறை 44 மற்றும் எம்சிஏ வழங்கிய தளர்வுகள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் ஆகியவற்றுடன் படித்த நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் பொது சுற்றறிக்கைகள், நிறுவனத்தின் உறுப்பினர்களின் ஒப்புதல் மின்-வாக்களிப்பு மூலம் கோரப்பட்டது. 2020 ஜுன் 05 தேதியிட்ட அறிவிப்பில் முன்மொழியப்பட்ட சிறப்புத் தீர்மானங்களில் மின்னணு முறையில் வாக்களிக்க உறுப்பினர்களுக்கு இ-வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்கியிருந்தது. தொலைதூர மின்-வாக்களிக்கும் வசதியை வழங்குவதற்காக தேசிய பாதுகாப்பு வைப்புத்தொகையின் சேவைகளை நிறுவனம் மேற்கொண்டது. இயக்குனர்கள் குழு ஒரு பயிற்சி நிறுவன செயலாளர் திரு. பி.எஸ். சீனிவாசன், மின்-வாக்களிப்பை நடத்துவதற்கான பரிசோதனையாளராகவும், அது குறித்த அறிக்கை ஜுலை 13, 2020 அன்று பெறப்பட்டது. ஸ்க்ரூட்டினீசரின் அறிக்கையின் அடிப்படையில் முடிவுகளின் விவரங்கள் பின்பருமாறு.

| சிறப்பு தீர்மானங்களின் விளக்கம் | வாக்களிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | ஆதரவான வாக்குகளின் எண்ணிக்கை | எதிரான வாக்குகளின் எண்ணிக்கை | ஆதரவாக சதவிகித வாக்குகள் | எதிரான சதவிகித வாக்குகள் |
|---|---|---|---|---|---|
| நிறுவனத்தின் சங்கத்தின் மெமோராண்டமில் பொருள்களின் உட்பிரிவை மாற்றுதல். | 9862648 | 9861173 | 1475 | 99.9850 | 0.0150 |
| நிறுவனங்கள் சட்டம், 2013-ன் விதிமுறைகளுடன் இணங்குவதற்கான பொருள்களின் பிரிவு மற்றும் பொறுப்புணர்வு சங்கத்தின் மெமோராண்டம் பிரிவு. | 9862648 | 9861173 | 1475 | 99.9850 | 0.0150 |

தீர்மானங்கள் 2020 ஜுலை 12 அன்று தேவையான பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டன, இது மின்-வாக்களிக்கும் காலத்தின் கடைசி தேதி. நிறுவனத்தின் வலைத்தளமான www.kingfaindia.com இல் வெளியிடப்பட்ட வாக்களிப்பு முடிவுகள் மற்றும் ஸ்க்ரூடினைசர்ஸ் அறிக்கை பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் தேசிய பங்குச் சந்தை இந்தியா லிமிடெட் (www.nseindia.com) ஆகியவற்றின் வலைத்தளத்திலும் கிடைக்கிறது.

வாரியத்தின் உத்தரவுப்படி
கிங்ஃபா சயின்ஸ் & டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட் - காக
நிர்னாய் சர்
நிறுவனத்தின் செயலாளர்
இடம் : புனே
நாள் : ஜுன் 13, 2020

மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்
ClubMahindra
பதிவு அலுவலகம்: மகேந்திரா டவர்ஸ் 2வது தளம், 17/18, பட்டுல்லாஸ் சாலை, சென்னை–600 002.
Tel: +91 44 3988 1000, Fax: +91 44 3027 7778
இணையதளம்: www.clubmahindra.com
மின்னஞ்சல்: investors@mahindraholidays.com
சிஐஎன்: L55101TN1996PLC036595

அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியலிடும் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டுத் தேவைகள்) விதிகள் 2015ன், விதிமுறைகள் 29 மற்றும் விதி 47 ஆகியவற்றின்படி இதர அலுவல்களுக்கு இடையே, நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் மறுவரையறுக்கப்பட்ட ஆய்விற்குட்பட்டு ஜூன் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் வழங்க நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை, ஜூலை 31, 2020 அன்று நடத்தப்பட உள்ளது.
இந்த அறிவிப்பு நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பிஎஸ்சி லிமிடெட்டின் இணையதளம் (www.bseindia.com), நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.clubmahindra.com ஆகியவற்றிலும் பெறக்கூடும்.

மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
தன்ராஜ் முல்கி
பொதுச் சட்ட ஆலோசகர் மற்றும் கம்பெனி செயலாளர்
இடம் : மும்பை
தேதி : ஜூலை 13, 2020

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
தி ஒபராய் குழும உறுப்பினர்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
Telephone: 91-44-2234 4747; Facsimile: 91-44-2234 6699, 91-44-2234 4985
முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு: 7 ஷாம் நாத் மார்க், டெல்லி-110054
Telephone: 91-11-2389 0505; Facsimile: 91-11-23890575
Website: www.eihassociatedhotels.in
Email: isdho@oberoigroup.com; invcom@tridenthotels.com
CIN: L92490TN1983PLC009903

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது:

(a) வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டின் 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் ('AGM') புதன்கிழமை, 12 ஆகஸ்ட் 2020 அன்று இந்திய நேரப்படி மாலை 3.30 மணிக்கு காணொளி காட்சி ('VC)/ பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெறுகிறது.

(b) COVID–19 தொற்று நோய் பரவல் காரணமாகவும், மக்கள் நடமாட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும் கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட 8 ஏப்ரல் 2020, 13 ஏப்ரல் 2020, 21 ஏப்ரல் 2020, 5 மே 2020 மற்றும் 15 ஜூன் 2020 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி, (‘சுற்றறிக்கைகள்’) ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் நேரில் ஆஜராகாமல் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி அளித்துள்ளது. கம்பெனிகள் சட்டம் 2013 (‘சட்டம்’), செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 (‘‘பட்டியல் விதிகள்’’) மற்றும் சுற்றறிக்கைகளின்படி, கம்பெனியின் 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் VC/OAVM மூலம் நடைபெறும். நடைபெற உள்ள வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் VC/OAVM மூலமாக கலந்து கொள்ளலாம்.

(c) KFIN டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் ("KFIN") வழங்கும் VC வசதி மூலம் 37வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் பங்கேற்பதற்கான வசதிக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது.

(d) மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2019–20 ஆண்டறிக்கை ஆகியவை கம்பெனி/ டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்படும். வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு கம்பெனியின் வலைத்தளம் www.eihassociatedhotels.in, பங்குச் சந்தைகளின் வலைத்தளம், அதாவது பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் www.bseindia.com மற்றும் www.nseindia ஆகியவற்றிலும் கிடைக்கும் என்பதையும் மற்றும் KFIN https://evoting.karvy.comன் இணையதளத்திலும் கிடைக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(e) கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் பொதுக்கூட்டங்களில் செயலக தரநிலை விதி 44ன்படி, மின்னணு வாக்குப்பதிவு முறையை (வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வாக்களிப்பு) பயன்படுத்தி வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது வாக்களிக்கும் வசதியை கம்பெனி தனது உறுப்பினர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது, மின்னணு முறையில் வாக்களிப்பதற்கு வசதியாக KFIN சேவைகளுக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/மின்னணு வாக்குப்பதிற்விற்கான விரிவான நடைமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ளது.

(f) காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள மற்றும் கம்பெனியுடன் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத/புதுப்பிக்காத பங்குதாரர்கள் பதிவு செய்ய/புதுப்பிக்க விரும்பினால் கம்பெனியின் பங்கு பரிமாற்ற முகவருடன் தொடர்பு கொள்ளலாம்/எழுதலாம் அதாவது EIH லிமிடெட், முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, isdho@oberoigroup.com, tejasvi.dixit@oberoigroup.com or invcom@tridenthotels.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் டீமெட்டிரிலைஸ்ட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்ய/புதுப்பிக்க தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளரை தொடர்பு கொள்ளலாம்/எழுதலாம்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்
இடம்: கொல்கத்தா
தேதி : 14 ஜூலை, 2020